225—

கால்நடை மருத்துவமனை

***75603—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றத்தூர் பகுதி, கால்நடைகள் மிகவும் மிகுந்த பகுதி. மாட்டினம் 32,935, செம்மறியாடுகள் 6,203, வெள்ளாடுகள் 14,995, கோழியினங்கள் 24,091. இப்படி நிறைய கால்நடைகள் இருக்கின்ற பகுதியில் கால்நடை மருத்துவமனை அவசியம் தேவைப்படுகிறது. மீண்டும், பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் 498 மாட்டின அலகுகளும், 29 ஆட்டின அலகுகளும், மொத்தம் 527 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மேலும், 3 கிலோ மீட்டர் தொலைவில் குன்றத்தூர் கால்நடை மருந்தகம், 3.5 கிலோ மீட்டர் தொலைவில் திருமுடிவாக்கம் கால்நடை கிளை நிலையம் மற்றும் 5 கிலோ மீட்டர் தொலைவில் திருநீர்மலை கால்நடை கிளை நிலையம் ஆகியன செயல்பட்டு வருவதால், புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் படப்பையிலே கால்நடை பன்முக மருத்துவமனை 1975 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. 1* acre, *27* cent *இடம் இருக்கிறது. அது பன்னிரெண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம். அந்த நிலம் காலியாக இருக்கிறது. எங்கள் கோரிக்கையை ஏற்று, 2021 ஆம் ஆண்டு கடித எண் 906 மூலம் கால்நடை பாலிகிளினிக் அமைக்க தங்களுடைய அனுமதிக்காக வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அதற்கு அடிக்கல் நாட்டுவதற்கு இசைவு தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படப்பையிலே பன்முக மருத்துவமனை அமைக்க வேண்டும்; அதற்கு அடிக்கல் நாட்டுவதற்கான வழிவகைகள் உண்டா என்று கேட்டிருக்கின்றார்கள். எங்களுடைய துறையினுடைய*

[2023 அக்டோபர் 11

அலுவலர்களை ஆய்வுக்கு அனுப்பி, தேவையானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்றாற்போல் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள வரதராஜன்பேட்டை பேரூராட்சி முற்றிலும் விவசாயம் நிறைந்த பகுதியாகும். இங்கு ஏராளமான கால்நடைகள் உள்ளன. இங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென்றால், 10 கிலோ மீட்டர் தூரமுள்ள ஆண்டிமடம் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி கால்நடைகள் அதிகமுள்ள விவசாய நிலப் பகுதி என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை விடுத்தவண்ணமாக உள்ளனர். அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்யப்படும். அரசு வகுத்துள்ள வரையறைக்குட்பட்டிருப்பின், அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, வருங்காலங்களில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட 50,000-க்கும் மேற்பட்ட ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதான தொழிலாக ஆடுகளை மேய்த்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பதிலிலும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களை அமைக்க கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளார்கள். துறையின்மூலம் அவற்றை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைக்கேற்ப அதற்கான நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

படகுக் குழாம்

***7868—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—